★ அமைச்சர் ரணில் குற்றச்சாட்டு

# ஸ்ரீமாவோவின் கண்டிப்பு நடவடிக்கை தாக்குதல் சம்பவங்களை ஊக்குவிக்கும்

கொழும்பு இராணுவ தலைமையகத்தைத் தாக்கியவர்களை கண்டிப்பதை விடுத்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பாதுகாப்பு படையினரை கண்டிக்கிறார் இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு குண்டு வெடிப்பு தொடர்பாக ஸ்ரீமாவோ விடுத்த அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். ஸ்ரீமாவோ தனது அரசியல் இலாபத்தைக் கருதி இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதை எதிர்பார்த்திருந்தாரென்பது அந்த அறிக்கையின் தொனிப்பொருளாக இருக்கிறது. பொதுமக்கள் பாதுகாப்பை எண்ணி முதலைக் கண்ணீர் விடும் திருமதி பண்டாரநாயக்கா தாம் அடிக்கடி விடும் அறிக்கைகளில் தீவிரவாதிகளின் செயற்பாட்டை, தாக்குதல்களை, பாராட்டுவது போல் உள்ளது எனவும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கண்டனம் வெளியிட்டுள்ளார். (74)


பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 215 பிரசோற்பத்தி ஆனி 17 (01 - 07 - 1991) திங்கள்


★ வோய்ஸ் ஓ·ப் அமெரிக்காவுக்கு கொழும்பு அனுமதி

# அமெரிக்க வானொலி நிலையம்

# இந்திய அரசு கண்டனம்!

## 1987 ஒப்பந்தத்தை இலங்கை மீறுகிறதாம்

இலங்கையில் அமெரிக்க வானொலி நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பது குறித்து இந்திய அரசு கவலையும் கண்டனம் தெரிவித்துள்ளது!

அமெரிக்காவின் 'வோய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலி நிலையம் ஒன்று கொழும்புக்கு அருகில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் பொருட்டு தற்போது நிலையத்திற்கான உயர் ஒலிபரப்பி கோபுரம் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அமெரிக்க வானொலி நிலையம் இலங்கையில் அமைவது குறித்தான இந்தியாவின் நிலைப்பாட்டை கொழும்பு வந்துள்ள இந்தியாவின் வெளியுறவு அமைச்சின் செயலர் முஜ்குந்டுபே இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சின் செயலர் பேர்னாட் திலகரட்னாவைச் சந்தித்த டுபே இது குறித்து விரிவாக பேச்சு நடாத்தியதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

1987 இல் செய்து கொள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஒரு லட்சம் ரூபா செலுத்திச் சென்று ரூமேனியாவில் இருந்து இலங்கையர் திரும்பினர்

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கென தொழில் முகவர்களினால் அனுப்பப்பட்ட 10 இலங்கையர் ரூமேனியாவில் வைத்து மீண்டும் இலங்கை திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் [illegible]நாயக்கா விமான நிலையம் வந்தடைந்துள்ளனர். ஒவ்வொருவரும் தலா ஒரு லட்சம் ரூபாவை முகவரிடம் கட்டி வெளிநாடு பயணமானார்கள்.

எனினும் இவர்கள் ரூமேனியாவில் அநாதரவாகவிடப்பட்டனர். இவர்களைக் கைது

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை தாக்குதல்

கடந்த புதன்கிழமை இரவு எட்டு மணியளவில் பருத்தித்துறை கடற்கரைப் பகுதியிலிருந்து கடற்படையினர் குடிமனைப் பகுதிகளை நோக்கி சில மணி நேரம் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர், 38

## கனேடியத் தூதுவரும் கொக்கட்டிச்சோலை விஜயம்

கொக்கட்டிச்சோலைப் பகுதிக்கு கனேடியத் தூதுவரும் [illegible] செய்துள்ளார். இலங்[illegible]கான கனேடியத்தூதுவர் [illegible]வி நான்ஸிகெடிவில் [illegible]யம்பதி உதவி அரச[illegible]ர் கே. கருணாகரனு[illegible] இப்பகுதிக்குச் சென்றிருந்தார்.

கொக்கட்டிச்சோலை அகதி முகாம் சென்று அங்குள்ளவர்களுடனும் தூதுவர் நான்ஸி உரையாடினார். எனினும் படுகொலை நடைபெற்ற இடத்துக்கு அவர் செல்ல அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. 74

## குஞ்சுப்பரந்தனில் லோறி விபத்து

குஞ்சுப்பரந்தன் 7 ஆம் கட்டை பாலத்தில் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று புரண்டுவிபத்துக்குள்ளானது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அகதிகள் நிலைமை ஜெயலலிதா பேச்சு

தமிழ் நாட்டில் தங்கியுள்ள [illegible]திகள் பற்றி தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா [illegible]து முக்கிய அதிகாரிகளோடு பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு அவர்கள் [illegible]த விவரங்கள், முகாம்களின் விவரங்கள், அவர்களுக்குரிய நிவாரண உதவிகள் என்பன குறித்து அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடியதாக இந்துப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. 33

### கொழும்பு குண்டு வெடிப்பு

## முன்னாள் பஸ் நடத்துநரே தாக்குதலுக்குக் காரணமாம்!

கொழும்பு கூட்டுப்படை இராணுவத் தலைமையகத்தை தற்கொலைப்படை தாக்கியதற்கு நடராஜா ஸ்ரீதரன் (வரதன்) என்பவரே காரணம் என நேற்றுப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் இவர் பருத்தித்துறை பஸ்டிப்போ நடத்துநராகப் பதவி வகித்தவர் என

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படையினர் தாக்கி ஆறு மீனவர்கள் காயம்

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் கடற்றொழிலுக்கு படகில் சென்ற மீனவர்கள் அறுவர் மீது கடற்படையினர் கடுமையாகத்தாக்கியதால் இவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சுண்டிக்குளம் பகுதியில் இருந்து சில தினங்களுக்கு

→ 04 ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரியில் மரண தண்டனை

அந்தோனிப்பிள்ளை கிறி[illegible]டி (மகேந்தி - இளவாலை) ஆகிய இவர் எமது புனிதமான இயக்கத்தின் கட்டுப்பாடு, விதிகளை மீறி ஒரு பெண்ணை பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முயன்றதால் இவருக்கு எமது இயக்கத்தின் அதி உயர் தண்டனை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தேங்காய் பறித்தவர் இராணுவம் சுட்டு மரணம்

நேற்றுக்காலை 9 மணியளவில் வீமன்காமம் பகுதியில் தேங்காய் பறிப்பதற்காக தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் அப்பகுதியில்

→ 04 ஆம் பக்கம் பார்க்க

### பிரட்மன் வீரக்கோன் தகவல்

## ஒப்பந்தம் குறித்து ஜெயலலிதா கருத்து இலங்கை அரசு உன்னிப்பாக கவனிக்கிறது

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் செயலிழந்து விட்டதும் புதிய ஒப்பந்தமே இரு நாடுகளிடையிலும் செய்து கொள்ளப்படவேண்டும் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்த கருத்தை இலங்கை அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

இவ்வாறு ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

"இது பற்றி நாம் இந்திய அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும் புதிய ஆலோசனைகள் குறித்தும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

பிரதமர் நரசிம்மராவை விரைவில் சந்தித்து இலங்கை நிலைமை குறித்து பேசப்போவதாக ஜெயலலிதா கூறியிருந்ததையும் இலங்கை அரசு கவனத்தில் எடுத்துள்ளது எனவும் பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்தார். (74)

## பஞ்சாப் வேட்பாளர் தாக்குண்டார்

பஞ்சாப்பில் மாநில சட்டப் பேரவைக்குப் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் தாக்குதலுக்குள்ளானார். ஆயினும் அவர் காயம் எதுவுமின்றித் தப்பியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை கடந்த வெள்ளி இரவு முதல் பல்வேறு இடங்களில் நடைபெற்ற பல்வேறு தாக்குதல்களில் ஒன்பது தீவிரவாதிகளும், நான்கு பாதுகாப்புப் படையினரும் உட்பட இருபத்தொன்பது பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

## சிங்கப்பூர் அமைச்சரவை மாற்றம்

சிங்கப்பூர் பிரதமர் சொகற்டோ தனது அமைச்சரவையில் பல மாறறங்களை மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளார்,

இதுவரை பாதுகாப்புப் பொறுப்பை வகித்துவந்த பிரதமர் அப் பொறுப்பை ஜோனிங்கோங்கிடம் கையளித்துள்ளார். மத்திய அமைச்சர் சிலருக்குப் பதவி உயர்வும் வழங்கப் பட்டுள்ளது இரண்டு துணைப்பிரதமர்களின் பொறுப்பில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப் படவில்லை.

★ எஸ். வி. மாளவியா கருத்து

# சபாநாயகர் பதவிக்கு இந்திராகாங்கிரஸ் முன்வரக்கூடாது

இந்திரா காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை ஆதரவு இல்லை என்ற நிலை தோன்றுவதால் லோகசபை சபாநாயகர் பதவிக்கு இந்திரா காங்கிரஸ் முன்வரக்கூடாதென்று சமாஜவாதி ஜனதாக்கட்சி கருத்து வெளியிட்டுள்ளது.

சபைமுதல்வர் பதவி ஆளும்கட்சிக்கே கிடைக்க வேண்டுமெனப் பாராளுமன்ற விவகார அமைச்சர் குலாம் நபி ஆஷாத் கூறியதற்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

சமாஜவாதி ஜனதாக்கட்சியின் பொதுச்செயலாளர் எஸ். வி. மாளவியா சபையில் ஆளும் கட்சிக்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்தால் மட்டுமே சபை முதல்வர் பதவி ஆளும் கட்சிக்குரியது என்ற மரபு சரியாக இருக்கும் என்றார்.

# நற்பணியில் நாலாண்டு கண்ட யாழ் ஜெய்ப்பூர் தொழிற்சாலை

யாழ் ஜெய்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலைக்கு இன்றுடன் நாலாண்டுகள் பூர்த்தியாகிறது. இத் தொழிற்சாலை உருவாகிய வரலாறு, இதனுடைய செயற்பாடுகள், செயற்திட்டங்கள், இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் இதன் செயற்திறனுக்கு சவாலாக எழுந்துள்ள தடைகள் மற்றும் பற்றாக்குறைகள் என்பனபோன்ற பலவிடயங்களை அறியாதவர்கள் எம் மத்தியில் பலர் இருக்கிறார்கள்.

1983ஆம் ஆண்டு யூலை மாதத்திற்குப் பின் எம் நாட்டில் குறிப்பாக வடபகுதியில் யுத்த நிகழ்வுகள் தீவிரமாகி வான் தாக்குதல், மிதிவெடி விபத்துக்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாகி கை, கால் துண்டிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து யாழ்ப்பாணத்தில் இவ் அங்கவீனர்களுக்கு செயற்கை அங்கம் பொருத்தப்படும் வசதிகள் இருக்கவில்லை. கொழும்பு அல்லது இந்தியா சென்று செயற்கை அங்கங்களைப் பொருத்தி வருவது இலகுவாயிருக்கவில்லை. உடல்உளபாதிப்பால் வாடி முடங்கிய இந்த அங்கவீனர்களுக்கு, தம் மைந்தர்களின் பாதுகாப்புக்காகப் போராடி யாழ்ப்பாணத்தில் அன்று ஒரு மாபெரும் சக்தி படைத்த செயற்குழுவாக இயங்கி சாதனைகள் பல ஏற்படுத்திய அன்னையர் முன்னணியினர் புனர்வாழ்வு அளிக்க முன்வந்தனர்.

1987ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாந் திகதியன்று அன்னையர் முன்னணியின் ஆதரவில் யாழ் சுண்டிக்குளி பழைய பூங்காவீதியில் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை உதயமாகியது இந்தியாவில் ஜெய்ப்பூரில் வாழ்ந்த பிரபல எலும்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் P. K. செந்தி என்பவரால் செயற்கைக்கால் அங்கம் முதன் முதலில் ஜெய்ப்பூரில் உருவாக்கப்பட்டமையால் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை என்ற சிறப்புப் பெயரிலேயே கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இந் நிறுவனங்கள் அமைந்தன என்பதை நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தன் லட்சியமே கண்ணாக கருமமாற்றி வருகிறது. இங்கு பொருத்தப்படும் செயற்கை அங்கங்கள் எம் நாட்டின் சுவாத்தியத்திற்கு ஏற்றதாயும், எத்தொழிலும் புரிய உகந்த முறையில் அமைந்ததாயும், சருமநிறத்தை ஒத்ததாகவும், பாரம் குறைந்ததாகவும் விலையும் குறைவானதாகவும் இருப்பதனால் இவற்றிற்கு மக்களிடையே நல்லவரவேற்பு இருக்கிறது. தங்குமிட வசதி கொண்ட இத் தொழிற்சாலையில் ஐந்து நாட்கள் மட்டுமே தங்கி வைத்திய பரிசோதனைக்கு உட்பட்டு, அங்கம் பொருத்தப்பட்டு அதனைப் பாவிக்கும் பயிற்சியையும் பூரணமாகப் பெற்று தமது சொந்தக் கால்களிலேயே நடப்பது போன்ற ஓர் உணர்வுடன் உடல் உள ஊனமற்றவர்களாக இவர்கள் மனநிறைவுடன் திரும்பிச் செல்கின்றனர்.

இன்று வரை இத் தொழிற்சாலையில் ஆண், பெண் இருபாலருக்குமாக 434 செயற்கைக்கால் அங்கங்களும், 34 கை அங்கங்களும், 19 கலிப்பர்களும் பொருத்தப்பட்டுள்ளன. அத்தோடு தேவை ஏற்படும் போதெல்லாம் இவற்றைத் திருத்தியும் இயற்கைக் கால் வளர்ச்சிக்கு ஏற்றதாகச் செயற்கைக் கால்களை மாற்றி அமைத்தும் கொடுக்கப்படும். இதைவிடப் பத்துத் தள்ளு கதிரைகளும் (Wheel Chairs) ஐந்து முச்சக்கர வண்டிகளும் இத்தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டுச் செயற்கை அங்கங்கள் கூடப் பொருத்தப்பட முடியாதவாறு முடமாகிய அங்கவீனர்களுக்குக் கொடுத்து உதவப்பட்டுள்ளது.

அங்கங்களைப் பொருத்துவது மாத்திரமல்லாது, இவர்களது நிரந்தரப் புனர்வாழ்வுக்கும் உகந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதும், அமைத்துக் கொடுப்பதும் இந்நிறுவனத்தின் இன்னொரு சிறப்புப் பணியாகும்.

தற்போது பனைவள அபிவிருத்திச் சபையின் உதவியுடன் தொழிலகத்துக்குச் சொந்தமான மணியம்தோட்டப்பகுதியில் அமைந்துள்ள 'வசந்தபுரம்' என்னும் சிறு பண்ணையில், ஊக்குவிப்புப் பண உதவியுடன் சுயதொழில் வேலைவாய்ப்புக்கான ஒரு கைப்பணிப் பயிற்சி நெறியும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அத்தோடு யாழ் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணரொருவரின் சேவைநலம்மிகுந்த உதவியால் இளம்பிள்ளைவாதம் போன்ற இயற்கை நோயினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வைத்திய உதவி அளிக்கப் பட்டுவருகிறது.

நவீன முறைகளைக் கையாள இத் தொழிலகம் திட்டமிட்டுள்ளது. விதாரிக்கப்பட்ட சேவைகளையும் தற்போதைய சேவையையும் இன்னும் திறம்படச் செய்யத் தொழிற்சாலைக்கு ஒரு நிரந்தரக் கட்டிடம் தேவை. இவற்றையெல்லாம் நடைமுறைப் படுத்தக் கூடுதலாகப் பணம் தேவைப்படுகிறது. இந்த நிதி உதவியை உள்நாட்டு, வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்களும், சமூகசேவை ஸ்தாபனங்களும், தனியார் துறைகளும், மாணவர் அமைப்புக்களும், பொதுமக்களும் இன்னும் கூடுதலாக வாரிவழங்கினால், கூடிய சீக்கிரத்தில் தொழிலகத்தின் செயற்பாடு அதிகரித்து, நிரந்தர அங்கவீனர்கள் என்ற இழிநிலையில் எம் சமூகத்தில் யாருமே இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்தலாம். சகல தரப்பட்ட அங்கவீனர்களுக்கும் அப்புனர்வாழ்வின் ஆரம்பத்தோடு, அவர்கள் வாழ்வையும் புனரமைப்புச் செய்து அவர்கள் பழையபடி சமூகமட்டத்தில் இரண்டற கலந்து சுதந்திர மனிதர்களாக நடமாடும் ஒரு சந்தோஷ நிலையையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பது இந்த நிறுவனத்தின் பேரவாவாகும்.

திருமதி திலகவதி யோகநாதன்

### மஹா கும்பாபிஷேகம்

பண்டத்தரிப்பு — காலையடி அருள்மிகு ஞானவேலாயுத சுவாமி தேவஸ்தான நூதனப் பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம்எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமையன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.(13)


### சிறு விளம்பரம்

தேவை
மஞ்சள் கொன்றைவிதை தேவை. ''மில்க்வைற்''
யாழ்ப்பாணம். 07002

புனித யாத்திரைத்தலமான புங்குடுதீவு
அருள்மிகு அந்தோனியார் ஆலய
**வருடாந்த உயர் திருவிழா**

5-7-91 வெள்ளி பி. பகல் 4. 30 மணி
கொடியேற்றம்
6-7-91 சனி மாலை 5. 30 மணி திருப்பலிப் பூசை நற்கருணைப்பவனி ஆராதனை
7-7-91 ஞாயிறு காலை 8. 00 மணி திருவிழா திருப்பலிப்பூசை - நற்கருணைத் திருவிருந்து
காலை: 9. 00 - மணி அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி

திருவிழாக்குருக்கள்: தவத்திரு சந்திரபோஸ் சுவாமிகள்.
இந்நற்செய்தியை அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

பங்குத்தந்தையும்
ஆலய நிர்வாகக் குழுவும்.

விளம்பர அன்பளிப்பு:
ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ
பிடவை வியாபாரம்,
யாழ்ப்பாணம்.

பாலவிநாயகர் றேடஸ்
கிளிநொச்சி. 07001

முரசொலி
விளம்பரங்களுக்கு
25 %
விசேட தள்ளுபடி!
முரசொலியில் பிரசுரமாகும்
சகல விளம்பரங்களுக்கும்
இன்று தொடக்கம்
25 வீதம் விசேட தள்ளுபடி
வழங்கப்படும்!
செய்திச் சிறப்பிலும்
வாசகர் தொகையிலும்
முந்தும் முரசொலி வழங்கும்
முத்தான சலுகை இது!
முரசொலியில் விளம்பரம் செய்ய விளாவுங்கள்
செலுத்தும் பணத்திற்குப் பன்மடங்குபலன் பெறுங்கள்
A07003

ENGLISH ASSISTANT TEACHERS EXAMINATION
COMPLETE COURSE, MODEL QUESTIONS
AND PAST QUESTION PAPERS DISCUSSED
V. N. KANDASAMY A.I.B. PART - I
(LONDON) INTER (LONDON)
No. 87, Adiyapatha Road
(NEAR AMPADDAPPALAM)
KOKUVIL EAST KOKUVIL 07004

முரசொலி

எமது சிந்தனை

01 - 07 - 1991

# ஞானம் பிறந்துவிட்டது துணிவு?

ஸ்ரீலங்கா ஜனாதிபதி மீண்டும் சமாதானம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். கம்புறுப்பிட்டியில் கிராம எழுச்சி வைபவத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த போதே சமாதானம் பற்றிப் பேசியிருக்கிறார்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாம். இந்த உணர்வு இப்போதுதான் திடீரென அவருக்கு ஏற்பட்டுள்ளது.

முத்தமிழ் விழாவில் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பேசும்போது ''இப்போது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தா விடில் தமிழீழ அரசுடன்தான் பேசவேண்டி வரும்'' என்று அறை கூவினார்.

அதற்குப்பின்தான் இந்த மாற்றமா?

விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை ஆறுமாதத்திற்குமுன் அறிவித்தபோது ஜனாதிபதி என்ன செய்தார்? இது ஒரு தேசியப் பிரச்சினை. சமாதானம்தான் முக்கியம். சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்று கருதினாரா?

புத்தபிக்குகளிடம் ஆலோசனை கேட்டார். எதிர்க்கட்சிகளுடன் ஆலோசித்தார். ஆயுதப்படையினருடன் ஆலோசனை கலந்தார். அரச நிர்வாகத்தில் சம்பந்தப்படாத பலருடன் ஆலோசனை நடாத்தினார்.

அப்போது உதிக்காத ஞானம் இப்போது உதித்தது எவ்வாறு?

அன்ரன் பாலசிங்கத்தின் அறை கூவலாலா? வவுனியாவில் ஏற்பட்ட பின்னடைவினாலா? அல்லது கூட்டுப்படைத் தலைமையகம் குண்டு வெடிப்பில் தகர்க்கப்பட்டதினாலா இப்படியொரு ஞானோதயம்?

ஸ்ரீலங்கா ஜனாதிபதி மட்டுமின்றி, பல அமைச்சர்களும் உண்மை நிலையை உணர்ந்துள்ளமை புலனாகிறது.

புலிகளை ஆயுதபலத்தினாலோ ஆட்பலத்தினாலோ வெல்லமுடியாது. அவர்களுடைய மனோபலத்துக்கு முன் இவை எதிர்நிற்க மாட்டா.

எனவேதான் இப்போது இந்தச் சமாதானப்பேச்சு. அது ஒரு கிராம எழுச்சிக் கூட்டத்தில் கூட்டம் கூடும்போது ஜனாதிபதி இப்படிப் பேசுவது வழக்கம்.

தம்முடைய எண்ணத்தைச் செயற்படுத்த முடியாது அவர் தவிப்பது தெரிகிறது.

அதற்கும் காரணம் உண்டு. ஆட்சிப்பீடத்தில் உள்ள அரசியல் தலைவர்களும், அவரைச்சார்ந்த அமைச்சர்களும், நாட்டின் நலன்களைப் பாதிக்கும் விடயங்களில் தீர்மானம் எடுப்பவர்கள்

ஸ்ரீலங்காவில் அரசியல் தீர்மானங்களை எடுப்பது யார் என்ற வரையறை இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தை நடத்துவதுஜனாதிபதியா, புத்தபிக்குகளா, சிறில் ரணதுங்காவா, அல்லது பிரட்மன் விரக்கோனா?

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ரணதுங்கா அறிக்கை விடுகிறார். சில சந்தர்ப்பங்களில் பிரட்மன் அறிக்கை விடுகிறார். இந்த அறிக்கைகளில் கூறப்படும் விஷயங்கள் பற்றி அரச நிர்வாகம் முடிவெடுத்ததாகத் தெரியவில்லை.

சிறில் ரணதுங்கா தன்னிச்சையாக விடும் அறிவிப்புகளைப் பார்க்கும்போது அரசாங்கத்தை அவர்தான் நடத்துகிறாரோ என்றதொரு ஐயப்பாடு எழுகிறது.

''ஆயுதப்படைகள் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இல்லை'' என்று புலிகளின் பேச்சாளர் திலகரின் கூற்றை சிறில் ரணதுங்காவினது பேச்சும் செயலும் நிரூபிக்கின்றன.

மகா சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்கவே வெசாக்தினத்தையொட்டி யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்க வேண்டாமென வற்புறுத்திய எதிர்க்கட்சிகள் இப்போது பிரச்சினையைத் தீர்க்கும்படி கோருகின்றன.

என்ன செய்வதென்று தெரியாது தடுமாறுகிறார் ஜனாதிபதி.

ஒரு நாட்டின் தலைவருக்கு நிதானமும், மதிநுட்பமும் இன்றியமையாத பண்புகள் இந்த நாட்டின் ஜனாதிபதி இப்பொழுதாவது நிதானத்துடனும் மதிநுட்பத்துடனும் செயற்பட்டுத் தமிழ்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு தீர்க்கமான முடிவினை எடுக்கத்துணிவாரா?

# ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சி

ஸ்ரீலங்கா இராணுவ உயரதிகாரிகள் பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சி பெறுவதாகத் தெரிய வருகிறது.

இந்த அதிகாரிகள் கட்டம் கட்டமாக பாகிஸ்தானுக்கு இராணுவப் பயிற்சிக்காக அனுப்பப்படுவதாகவும், அவர்களுக்குச் சகலவிதப்பயிற்சிகளும் அளிக்கப் படுவதாகவும் கூறப்படுகிறது.

இப்படியான பத்து மாதப்பயிற்சியை முடித்துக் கொண்டு பிரிகேடியர் அலேகம நாடு திரும்பியுள்ளார். இவர் தென்மாகாணத்தில் ஜே. வி. பிக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் என்று தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இந்தியாவிலும் இப்படியான பயிற்சி பெறுகிறார்கள். அங்கு 600 பேர் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## கலை, இலக்கிய இதழ் பற்றிய கலந்துரையாடல்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் புதிதாக வெளியிடப்பட இருக்கும் கலை, இலக்கிய இதழ் பற்றிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொண்டு மேலான ஆலோசனைகளை வழங்கும்படி அழைக்கப்படுகின்றனர்.

முத்தமிழ் விழாப் பிரகடனத்தின்படி வெளியிடப்பட இருக்கும் இந்தக் கலை, இலக்கிய இதழ் விரைவில் வெளிவருவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

## தண்டம்

முத்தமிழ் விழாவிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மின் இணைப்புக்களிலிருந்து அனுமதியின்றி மின்சாரம் பெற்றமைக்காக யாழ்ப்பாண வர்த்தக நிலையத்தைச் சேர்ந்த ''றிக்கோ'', றொலெக்ஸ் உரிமையாளர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை காவேரி இல்லம் முதலிடம்

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மெய்வல்லுநர் போட்டிகள் கடந்தவாரம் கலாசாலை மைதானத்தில் உடற்கல்வி விரிவுரையாளர் கே. யதுகுலசிங் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றன.

இவ்வைபவத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வை கா. சிவப்பிரகாசம் பிரதம விருந்தினராகவும், திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி, செல்வி வ. சின்னப்பு ஆகிய முன்னை நாள் கலாசாலை அதிபர்களும், திருமதி சு. செல்லத்துரை முன்னைநாள் கலாசாலை உபஅதிபரும் கௌரவவிருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் 159 புள்ளிகளைப் பெற்ற காவேரி இல்லம் முதலாம் இடத்தையும், முறையே 139, 138 புள்ளிகளைப் பெற்ற சுவர்ணா, அருணா இல்லங்கள் இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றன.

200 மீற்றர் ஓட்டத்தை 25.91 செக்கனில் ஓடிய வீரன் ஆ. மரியதாசன் சிறந்த சாதனை வீரனுக்குரிய பரிசையும், உயரம் பாய்தலில் 4' — 1'' பாய்ந்த செல்வி ம. உமாகௌரி சிறந்த சாதனை வீராங்கனைக்கான பரிசையும் பெற்றனர்.

சிறந்த வெற்றி வீரனுக்கான பரிசு வீரன் ஆ. மரியதாசனுக்கும் சிறந்த வெற்றி வீராங்கனைக்கான பரிசு செல்வி ரீ. ஜீவமணிக்கும் கிடைத்தது.

விழாக்குழுச் செயலாளர்களாக சி. வ. செல்வநாயகம், செல்வி மு. பத்மாவதி ஆகியோர் கடமையாற்றினர். (16)

## தங்கப்பாளங்களை ஒப்படைக்க ஈராக் இணங்கியுள்ளது

வளைகுடா யுத்தத்தின் போது ஈராக்கிய இராணுவத்தினால் கொள்ளையடிக்கப்பட்டு ஈராக்கிற்குக் கடத்திச் செல்லப்பட்ட பெறுமதிவாய்ந்த பொருள்களை குவைத்திடம் திருப்பிக் கொடுப்பதற்கு ஈராக் சம்மதித்துள்ளது.

இத்தகவலை வெளியிட்ட ஐக்கியநாட்டு அதிகாரி இந்தப் பொருள்களில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தங்கப்பாளங்கள் அடங்கும் என்றும் இவற்றையே திருப்பிக் கையளிக்க வேண்டுமென்றும் குவைத்திய அரசு கேட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஈராக்கினால் கையளிக்கப்படும் பொருள்களில் மூவாயிரத்து இருநூற்றுப்பதினாறு தங்கப்பாளங்களும் நூதனசாலைப் பொருள்களும் அடங்கும்.

## தரமான பால் மா விநியோகம்

சங்கானை ப.நோ. கூ. சங்கத்திற்கு கிடைத்த 'ஹைலண்ட்' பால் மா பைக்கற்றுக்களில்ஒருபகுதிஉடைந்து பழுதடைந்ததன் காரணமாகவே சுகாதாரப் பகுதியினரால் பாவனைக்கு உதவாதது என்று நிராகரிக்கப்பட்டதாகவும் கிளைகளுக்கு விநியோகிக்கப்பட்ட பால்மா நல்ல தரமானவை என்றும் மக்கள் இவற்றை எவ்வித சந்தேகமும் இன்றி பயன் படுத்தலாம் என்றும் சங்கத் தலைவர் வை. செந்தில் நாதன்தெரிவித்தார். 13

## இந்திரா காங்கிரஸ் கூட்டம்

இன்றைய இந்திய அரசியல் நிலை பற்றி ஆராயும் பொருட்டு இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் இன்று புதுடில்லியில் நடைபெற இருப்பதாக இந்திரா காங்கிரஸ் பொதுக் கட்சி செயலாளர் எஸ். கே. எல் பகர் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் (ஐ.) கட்சி செயற்குழு புதிதாக அமைக்கப்பட்ட பின்னர் முதற் தடவையாகக் கூடும் கூட்டம் இதுவாகும்.

## அமெரிக்கா இரட்டை நிலை கடைப்பிடிப்பதாக அரபாத்

அமெரிக்கா இரட்டை நிலையைக் கடைப் பிடித்து வருவதாக யஸிர் அரபாத் கவலை தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனிய பிரச்சினை தொடர்பான ஐ. நா. வின் தீர்மானங்கள் சகலவற்றையும் கடைப்பிடிக்குமாறு இஸ்ரேலையும் அமெரிக்காவையும் கேட்டுள்ளார்.

ஐ. நா.வுக்கு அனுப்பிய செய்தியொன்றிலேயே மேற்கண்ட கண்டனத்தையும் தெரிவித்தார்.

## உடல் நலம் சீர்பெற தண்ணீர் அவசியம்

ஓர் இயந்திரத்திற்கு எண்ணெய் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாகும் மனித தேகத்திற்குத் தண்ணீர். எண்ணெய் போதுமானபடி இல்லாவிட்டால் நாளடையில் இயந்திரம் கெட்டுப்போகும். தண்ணீர் நமது உணவு விடயத்தில் செய்யும்வேலை வியக்கக்கூடியது. தண்ணீரின் உதவியில்லாவிட்டால் உணவைத் தேகத்தினுள் செலுத்த முடியாது. தண்ணீர் உணவைக் கரைக்கிறது. அப்படி அது கரைக்காவிட்டால் நாம் உண்ணும் உணவு உடலுக்கு வளர்ச்சியை அளிக்க முடியாது.

# கொழும்பு நகரப் பகுதியில் படையினர் திடீர்ச் சோதனை

இரண்டு வாகனங்களில் குண்டுவெடிக்கும் என்ற தகவல்களையடுத்து கொழும்பு நகரில் கடந்த வெள்ளிக்கிழமையும், வியாழக்கிழமையும் முந்நூறு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

புறக்கோட்டை நாலாம் குறுக்குத் தெருவில் மட்டும் 158 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேநேரம் கேந்திர நிலையங்கள், பிரதான வீதிகளில் பொலிஸாரும், முப்படையினரும் காவலில் ஈடுபட்டனர்.

நாலாம் குறுக்குத்தெருவில் நள்ளிரவு 11 மணிமுதல் அதிகாலை வரை தேடுதல் நடாத்தப்பட்டு வடக்குக் கிழக்கு மற்றும். மலையக இளைஞர்கள் 158 பேர் கைதானார்கள்.

வெள்ளவத்தையில் வீடுகள் சுற்றிவளைக்கப்பட்டு முப்பது இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, முகத்துவாரம், கிருலப்பனை ஆகிய பகுதிகளிலும் தேடுதல் நடாத்தப்பட்டது.

வங்கிகள், அரச கட்டிடங்கள், ரூபவாஹினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், பாலங்கள் என்பவற்றில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது

சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் யாவும் பலத்த சோதனையிடப்பட்டது. (74)

## ஜக்பொட் இயந்திரங்கள் மறைக்கப்பட்டுள்ளன

ஜக் பொட் சூதாட்ட இயந்திரங்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டு வந்ததை அடுத்து சிலர் அவற்றை மறைத்து வைத்துள்ளதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டுள்ள சூதாட்ட இயந்திரங்களை கண்டுபிடித்தால் மறைத்து வைத்துள்ளவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் நாலாயிரம் ஜக்பொட் சூதாட்ட இயந்திரங்களை அதன் உரிமையாளர்கள் ஒளித்து வைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

கைப்பற்றப்பட்ட சூதாட்ட இயந்திரங்கள் அனைத்தும் அழிக்கப்படும் என்றும் அதற்காகச் சொந்தக்காரருக்கு நட்டஈடு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. 33

## பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

நாட்டிலுள்ள பட்டதாரிகளை கூடுதலாக ஆசிரியர் பதவியில் அமர்த்த கல்வி அமைச்சுத்தீர்மானித்துள்ளது

தற்போது முப்பத்தையாயிரம் பட்டதாரிகள் வரை மட்டுமே ஆசிரியர் சேவையில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தக்கட்டுப்பாடுஇனி மேல் தளர்த்தப்படவுள்ளது.

பாடசாலைகளின் தேவைகளுக்கேற்ப நேரடியாகவே அப்பாடசாலைக்கு ஆசிரியர் நியமனம் நடைபெறும் வகையில் இப்புதிய திட்டம் அமுலாக்கப்படவுள்ளது.

பாடசாலைகள் தரம் பிரிக்கப்படுவது, பாடசாலை வட்டாரங்கள் தொடர்பான சட்டமூலம் விரைவில்பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கஷ்டப்பிரதேசங்களில்சேவை செய்ய விரும்பும் ஆசிரியர்களுக்கு மேலதிக அலவன்ஸ்களும் அவர்களின் பிள்ளைகளுக்கு உயர்தர பாடசாலைகளில் கல்வி வசதியும் அளிக்கப்படவுள்ளன. (33)

## இம்மாதம் முதல் மாலை நேர வகுப்புக்கள்

இம்மாதம் முதல் மாலை நேர வகுப்புக்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தொலைக்காட்சிப் பெட்டிகள் வானொலி என்பன இல்லாத பாடசாலைகளுக்கு அவற்றில் படிக்கும் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப பகல் போசனத்திற்கு வழங்கப்படும் நிதி உதவியைக் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டி வானொலி என்பவற்றை வாங்க அனுமதிக்கப்படும் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மாலை நேரத்தில் படிக்கும் மாணவர்களில் ஆயிரம் பேரைத் தெரிவு செய்து விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் உயர்தர பாடசாலைகளில் படிக்க புலமைப்பரிசில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## வவுனியாப் பகுதியில் பெரியவெங்காயச் செய்கை

வவுனியா,கிழக்கு மூலைதெற்குப் பகுதியில் பெரிய வெங்காயச் செய்கையை ஊக்குவிக்க விவசாயத் திணைக்களம் சர்வதேச போரூட் நிறுவனத்தின் உதவியுடன் ஈடுபட்டுள்ளது

மாமடுவ உட்பட இப்பகுதியில் சுமார் 200 ஏக்கரில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்குரிய விதை வெங்காயத்தை கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

கோவில் புதுக்குளத்தில் அண்மையில் வெங்காயநாற்று மேடை தயாரித்தல் அதனைப் பராமரித்தல் போன்றவை தொடர்பாக பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டது (33)

## தலவாக்கெலையில் தமிழ் இளைஞர் கைது

தலவாக்கெலைப் பகுதியிலுள்ளதங்கேகல குறூப்கேம்பிரிட்ஜ்தோட்டத்தில்உள்ளஇரு தமிழ் இளைஞர்கள் டற்சன் பிக்கப் வாகனத்தில் சிவில் உடையில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக தொழிற்சங்கவட்டாரங்கள் தெரிவித்துள்ளன

கந்தையா சிவஞானம்(25), செல்லமுத்து சௌந்தரராஜன் (22 ஆகிய இளைஞர்களே இவ்வாறு கடத்தப்பட்டவர்களாவர்.

நள்ளிரவு நேரம் மஞ்சள் நிற டற்சன் பிக்கப் வாகனத்தில் வந்த ஆறுபேர் இவர்களைக் கடத்திச் சென்றதாகவும் அவர்களில் ஒருவர் முக மூடி அணிந்திருந்ததாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்துபொலிஸாரிடம் தொடர்பு கொண்ட பொழுது தாம் எவரையும் கைது செய்யவில்லை என்று தெரிவித்தனராம்.

இரவு நேரங்களில் தோட்டங்களுக்குள் நுழைந்து எதுவித காரணமுமின்றி தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## ஊரடங்குச் சட்டத்தால் கல்வி பாதிக்கப்படுகிறது

முல்லைத்திவு மாவட்டத்தில் அடிக்கடி ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டு வருவதால் அப்பகுதி பாடசாலை மாணவர்களது கல்வி நிலை மோசமடைந்து வருவதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரு மாதங்களில் கூடுதலான நாள்கள் ஊரடங்குச்சட்டம்அமுல் செய்யப்பட்டதாகவும் குறைந்த நாள்களே பாடசாலை இயங்க முடிந்ததாகவும்இந்நிலையால் உரிய காலத்தில் கல்வியைத் தொடர முடியவில்லையெனவும் மாணவர்கள் பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (38)

### பதுளையில்

## மலையக தமிழ் இளைஞர் சிங்களவர் கைகலப்பு

பதுளை மாவட்டத்திலுள்ள மொரகொல்லை தோட்ட இளைஞர்களுக்கும் அப்பகுதியில் உள்ள சிங்கள இளைஞர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

தோட்டத்து தரிசு நிலங்களை விவசாய நடவடிக்கைக்கு வழங்கியது தொடர்பாகவே இக்கைகலப்பு ஏற்பட்டது.

இந்த தரிசு நிலங்களில் தோட்டத்து தமிழ் இளைஞர்கள் விவசாயம் செய்து வந்தனர். இதனை சகிக்க முடியாத அப்பகுதி சிங்கள இளைஞர்கள் தமிழ் இளைஞர்களை திவீரவாதத்துடன் தொடர்பு என்றும் புகார் செய்துள்ளனராம்.

இதனையடுத்து இருபகுதியினருக்கும் கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் இதில் தலையிட்டு தமிழ் இளைஞர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கியுள்ளனர். (33)

## வெளியுறவு அமைச்சர் மகன் பொலிஸாரால் கைதாவார்?

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிவ் சோலங்கியின் மகன் பாரத் சோலங்கி மீது குஜராத் பொலிஸார் கொலை குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

பாரதிய ஜனதா தொண்டர்கள் தேர்தல் பிரசார காலங்களில் தாக்கப்பட்டதற்கு இவர் காரணமாக இருந்ததாக பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவர் விரைவில் பொலிஸாரால் கைது செய்யப்படலாம் என ஏ. எப் பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது. (74)

### கடற்படை...

முன்பு இவர்கள் பிளாஸ்ரிக் படகில் மீன்பிடிக்கச் சென்றுகொண்டிருந்த போது விசைப் படகில் திடீரென வந்த கடற்படையினர் இவர்களைச் சில மணிநேரம் தடுத்து வைத்து தாக்கியுள்ளனர்.

கட்டைக்காட்டைச் சேர்ந்த யோகராசா என்பவரை கடற்படையினர் தமது படகில் ஏற்றியபின் தாக்கியுள்ளனர். இவரது தந்தையான மத்தேயு தேமிஸ் (65) என்பவரும் தாக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் சென்ற படகும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 79, 38

### குஞ்சுப்பரந்தன்...

நேற்றுக்காலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தால் அதில் பயணம் செய்த மூவர் காயமடைந்தனர். (79)

### முன்னாள்...

வும் தெரிவிக்கப்பட்டது. இவரை இப்போது கொழும்பு முழுவதும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் தேடி வருகின்றனராம்.

### பத்து...

செய்த ருமேனியன் பொலிஸ் இவர்களை உடனடியாகவே இலங்கைக்கு அனுப்பினர்

இவ்வாறு திரும்பியவர்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்கள் உள்ளதாக இவர்களை விசாரித்து வரும் இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (74)

### சிங்களவர், முஸ்லிம்கள்

## மேலதிக உதவி அரச அதிபர் திருமலையில் நியமனம்

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது மேலதிக உதவி அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இங்குள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சிங்களவர்களும், முஸ்லிம்களும் இப்பதவிக்கு நியமிக்கபபட்டுவருகின்றனர்.

திருகோணமலை உதவி அரசாங்க அதிபராக அ. சுப்பிரமணியசர்மா நியமனம் பெற்றுள்ளார். மேலதிக உதவி அரசாங்க அதிபராக டபிள்யூ. பி விஜயரட்ன நியமிக்கப்பட்டுள்ளார். (76)

## முல்லைத்தீவு வங்கிகள் இயங்கமுடியாத நிலை

முல்லைத்தீவில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவற்றை வேறு இடங்களில் இயங்க வைக்க எடுத்த முயற்சிகளுக்கு கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அனுமதி வழங்க மறுத்து வருகிறது.

இவற்றை வேறு இடங்களில் இயக்குவது குறித்து தொண்டர் நிறுவனங்களும் வங்கி அதிகாரிகளும் கூட்டுப்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகவும் ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் முல்லைத்திவு வங்கிகளில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல முல்லைத்தீவு. முத்தையன்கட்டு, புதுக்குடியிருப்புப் பகுதி பல நோ. கூ. சங்கங்களும் இவ்வங்கிகளின் சேவையின்றிப் பாதிக்கப்பட்டுள்ளன. (38)

### அமெரிக்கா...

ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி இந்தியாவின் அனுமதியின்றி வெளிநாடு எதனுடனும் ராணுவ மற்றும் உளவு நிறுவன வசதிகளைச் செய்து கொள்வதில்லை என இலங்கை அரசதரப்பில் உறுதி வழங்கி முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா ஒப்பமிட்டிருந்தார் என இந்தியா தனது கண்டனத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

### சாவகச்சேரியில்...

யான மரண தண்டனை சாவகச்சேரி பெருங்குளச்சந்தியில் விதிக்கப்பட்டுள்ளது என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

ஒழுக்கம், கட்டுப்பாடு, தியாகம், அர்ப்பணிப்பு, மிகுந்த எமது இயக்கத்தினை இது போன்ற ஒரு சிலர் களங்கப்படுத்துவது அனுமதிக்க முடியாத பாரதூரமான குற்றமே எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே பொதுமக்களாகிய நீங்கள் உரிமையோடும், சுதந்திரமாகவும், தவறுகளைச் சுட்டிக்காட்டி, உங்கள் புனிதமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வளர்க்க முன் வைக்க வேண்டும் எனவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

### தேங்காய்...

நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதலுக்கு உள்ளானான்.

16 வயது மதிக்கத்தக்க இவ் இளைஞன் மயிலிட்டியைச் சேர்ந்தவன் எனவும் கழுத்திலே காயமேற்பட்டு ஆபத்தான நிலையில் அம்புலன்ஸில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மரணமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது. (ப- 10)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டசசுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில்01 .07. 91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.